முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]


மாகாணக்கல்வித்திணைக்களம், வடக்குமாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) நிலையறிபரீட்சை - 2021
**General Certificate of Education (Ord. Level) Examination - 2021**

கத்தோலிக்க திருமறை
**Roman Catholic**

| 14 | T | I,II |
|---|---|---|

மூன்றுமணித்தியாலம்
**Three Hours**

கவனிக்க:

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (✕) இடுக.

## பகுதி I

1. திருவிவிலியத்தின் முதல் ஐந்து நூல்களின் தொகுப்பு அழைக்கப்படுவது.
   1. இறைவாக்கினர் நூல்கள்
   2. ஞான நூல்கள்
   3. சட்டநூல்கள்
   4. வரலாற்று நூல்கள்

2. இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து ஒரே இறைவனை மட்டும் வணங்க வேண்டுமென அறிவுரை கூறுவது.
   1. இணைச்சட்டப் பாரம்பரியம்
   2. யாவே பாரம்பரியம்
   3. எலோகிம் பாரம்பரியம்
   4. குருக்கள் பாரம்பரியம்

3. இணைத்திருமுறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டன என்பதற்கான சான்றுகளில் ஒன்று
   1. புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு 18 மேற்கோள்கள் ஞானநூலிருந்து எடுக்கப்பட்டமை
   2. கிரேக்கப் பிரதியும், இணைத்திருமுறை நூல்களும் வேறுபடுத்திக் காட்டப்பட்டமை
   3. ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தில் இணைத்திருமுறை நூல்கள் திருவழிபாட்டில் உபயோகிக்கப்பட்டமை
   4. இணைத்திருமுறை நூல்களில் இறைமனித உரையாடல் அதிகம் இடம் பெற்றமை

4. இணைத்திருமுறை நூல்களை சரியாக இனங்காட்டும் தொகுதியானது.
   1. தோபித்து,ரூத்து, யோசுவா
   2. எஸ்தர், எஸ்ரா, பாரூக்
   3. யூதித்து, சீராக்கின் ஞானம், எஸ்ரா
   4. பாரூக், யூதித்து, தோபித்து

5. தியானத்தில் ஆழ்ந்திருந்து, தமது தூதுப்பணியைக் குழுவாக மேற்கொண்டு, அடையாளங்களின் மூலம் தமது பணியை மேற்கொள்பவர்கள்
   1. எழுத்துவடிவம் பெற்ற இறைவாக்கினர்
   2. எழுத்துவடிவம்பெறாத இறைவாக்கினர்
   3. பெரிய இறைவாக்கினர்
   4. சிறிய இறைவாக்கினர்

6. "மானிடா, நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு" என்ற அடையாளத்தின் மூலம் இறைசெய்தி வழங்கப்பட்டது
   1. எசெக்கியேல் இறைவாக்கினருக்கு
   2. யோவேல் இறைவாக்கினருக்கு
   3. எசாயா இறைவாக்கினருக்கு
   4. எரேமியா இறைவாக்கினருக்கு



kalvi.lk

7. திருச்சபையைப் பரவச் செய்வதற்கு சின்ன ஆசியா முதல் கிரேக்கம், உரோமை வரை பயணம் செய்து மிகக் கஷ்டமான பணியிலே ஈடுபட்டவர்
   1. புனித யாக்கோபு
   2. புனித யோவான்
   3. புனித பேதுரு
   4. புனித பவுல்

8. திருச்சபை பரிசுத்தமாயிருப்பது
   1. புனித நகரில் ஆரம்பிக்கப்பட்டதனால் ஆகும்
   2. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனால் ஆகும்
   3. உலகெங்கும் பரவியிருப்பதனால் ஆகும்
   4. மூவொரு கடவுளுடன் கொண்டுள்ள உறவினால் ஆகும்.

9. "வாழ்வு தரும் உணவு நானே" என்ற இயேசுவின் வெளிப்பாட்டைத் தரும் நற்செய்தியாளர்
   1. லூக்கா நற்செய்தி
   2. மத்தேயு நற்செய்தி
   3. யோவான் நற்செய்தி
   4. மாற்கு நற்செய்தி

10. திருப்பலிச் சடங்கில் பிரதான நிகழ்வாக அமைவது
   1. இறைவன் இறையாசீரால் எம்மை அனுப்புவது ஆகும்
   2. அப்பத்தை எடுத்து நன்றி கூறி அதைப்பிட்டு பகிர்ந்து கொடுப்பதாகும்
   3. காணிக்கைச் சடங்கை நிறைவேற்றுவதாகும்
   4. இறைவார்த்தைக்கு செவிமடுத்தலாகும்

- பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 11ஆம் 12ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – பரிசுத்த திரித்துவத்தின் பெருவிழா
B – இறை அன்னையாம் மரியாவின் பெருவிழா
C – திரு இருதயத்தின் திருவிழா
D – தூய நற்கருணைத் திருவிழா
E – திருக்காட்சிப் பெருவிழா

11. பொதுக்காலத்தில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களாவன
   1. Aயும் E யும்
   2. Aயும் C யும்
   3. Aயும் Bயும்
   4. Eயும் C யும்

12. கிறிஸ்து பிறப்புக்காலத்தில் கொண்டாடப்படும் விழாக்களாவன.
   1. Aயும் E யும்
   2. Aயும் D யும்
   3. Bயும் E யும்
   4. A யும் C யும்

13. யோவான் நற்செய்திக்கு கழுகு என்ற அடையாளம் இடப்பட்டதற்கான காரணம்
   1. மிக ஆழமான இறையியற் கருத்துக்களை அது கொண்டிருப்பதால்
   2. செக்கரியாவின் பலியுடன் ஆரம்பிப்பதால்
   3. இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் இந்நற்செய்தி ஆரம்பிப்பதால்
   4. திருமுழுக்கு யோவானின் பாலைவனப் போதனையுடன் ஆரம்பிப்பதால்

14. இறைவழிபாட்டு அமைப்பினுள் இறையியல் அர்த்தத்தில் படைப்பை ஏழு நாட்களுக்குள் வரையறைப்படுத்தியுள்ள பாரம்பரியம்
   1. யாவே பாரம்பரியம்
   2. எலோகிம் பாரம்பரியம்
   3. இணைச்சட்டப் பாரம்பரியம்
   4. குருக்கள் பாரம்பரியம்

15. "எனக்கும் மண்ணுலகிற்குமிடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும் என்று உடன்படிக்கையின் வெளி அடையாளமாக விளங்கியது.
   1. விருத்தசேதனம்
   2. வானவில்
   3. பத்துக்கட்டளை
   4. மீட்பின் வாக்குறுதி



kalvi.lk

16. "இயற்கைக்கு மாறாக இடம் பெறும் நிகழ்வு புதுமை ஆகும்" இவ்வாறு கூறியவர்.
    1. புனித யோசவ்வாஸ் அடிகளார்
    2. புனித அம்புறோசியார்
    3. புனித அகுஸ்தினார்
    4. அசிசியில் புனதி பிரான்சிஸ்

17. திருச்சபை கற்பிப்பதன் படி திருமுழுக்கு யோவான் சென்மபாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.
    1. மரியா எலிசபெத்தை வாழ்த்திய போதாகும்
    2. தேவதூதன் செக்கரியாவிற்கு காட்சி கொடுத்த போதாகும்
    3. அவருக்கு யோவான் எனப் பெயரிடப்பட்ட போதாகும்
    4. அவர் இயேசுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்த போதாகும்.

18. பெந்தக்கோஸ்து விழா தொடர்பான கருத்துக்களில் பொருத்தமற்றது
    1. இயேசுவின் விண்ணேற்பையும், அவர் இறைமகிமையடைதலையும் குறிக்கின்றது
    2. தானிய அறுவடையின் முதற்பலனை ஒப்புக் கொடுத்தலைக் குறிக்கின்றது
    3. சீனாய் மலையில் பத்துக்கட்டளைகளைப் பெற்றுக் கொண்டதைக் குறிக்கின்றது
    4. திருச்சபையின் பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.

19. நற்கருணையின் முன்னடையாளங்கள் இரண்டு அடங்கும் விடையைத் தெரிவுசெய்க.
    1. மன்னா உணவு, செபம்
    2. உடன்படிக்கை, வேண்டுதல்
    3. மெல்கிசதேக் பலி, மன்னா உணவு
    4. நன்றிகூருதல், நினைவு கூருதல்

20. பணஆசையினால் வியாபாரத்திலும், மேலதிக வேலையிலும் ஈடுபடல் எக்கட்டளையை மீறும் செயலாகும்?
    1. முதலாம் கட்டளை
    2. மூன்றாம் கட்டளை
    3. ஐந்தாம் கட்டளை
    4. ஏழாம் கட்டளை

21. உடையை அல்ல உள்ளத்தைக் கிழித்துக் கொள்ளுதல் என்பது
    1. உள்ளம் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதாகும்
    2. மனம் வருந்துதல் இறைவனுக்குகந்த வாழ்க்கைக்கு அவசியமானதாகும்
    3. செய்த குற்றத்தை சீர் செய்து கொள்வதாகும்
    4. மனம் வருந்துவதற்கான தவச் செயல்களில் ஈடுபட வேண்டுமென்பதாகும்

- பின்வரும் அருளடையாளத்தைக் கவனத்திற் கொள்க.

| | |
|---|---|
| A – திருமுழுக்கு | B – திருமணம் |
| C – உறுதிப்பூசுதல் | D – ஒப்புரவு |
| E – குருத்துவம் | F – நற்கருணை |
| G – நோயில் பூசுதல் | |

22. மேற்கூறியவற்றில் குணமளிக்கும் மற்றும் சகித்துக் கொள்ளும் சக்தியைப் பெற்றுத் தரும் அருளடையாளங்கள் அடங்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
    1. A, B  2. D, G  3. F.G  4. B, E

23. மேற்கூறியவற்றில் புகுமுக அருளடையாளமாக அமையும் தொகுதியாவது
    1. A, B, C  2. B, G, E  3. A, C, E  4. A, C, F

24. சமூகப் பணிக்காக மற்றும் தமதும் பிறரதும் மீட்புக்காகச் செயற்பட அழைப்பும், பொறுப்பும் தரப்படும் அருளடையாளங்கள் அடங்கும் தொகுதி
    1. A, C  2. D, G  3. C, F  4. B, E



kalvi.lk

25. மேற்கூறியவற்றில் இவ்வருளடையாளங்களை வழங்க ஆயருக்கு மட்டுமே அதிகாரமுடைய அருளடையாளங்களைக் கொண்ட தொகுதி

1. C, G 2. C, E 3. D, G 4. A, C, E

26. திருமணத்தின் வெளி அடையாளமாக விளங்குவது
1. திருப்பலியில் சாட்சிகள் கையெழுத்திடுதலாகும்
2. திருப்பலியில் செய்து கொள்ளும் திருமண ஒப்பந்தமாகும்
3. திருமணத்தின் அடையாளமாக தாலியை அணிந்து கொள்வதாகும்
4. திருமணத்தம்பதியினர் மாலையை மாற்றிக் கொள்ளும் சடங்காகும்.

27. துறவற குழுமவாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாகக் குறிப்பிடப்படுபவர்கள்
1. புனித பக்கோமியோ, புனித அந்தோனியார்
2. புனித அந்தோனியார், புனித அகுஸ்தினார்
3. புனித ஆசீர்வாதப்பர், புனித பக்கோமியோ
4. புனித அகுஸ்தினார், புனித பிரான்சிஸ் அசிசியார்

28. கிறிஸ்தவ திருமணத்தின் சிறப்பான நோக்கமாவது
1. இரு பிரிவினரதும் பெற்றோர்களின் பௌதிகத் தேவைகளை நிறைவு செய்தல்
2. குடும்பத்தில் அனைவரும் வாழ இல்லிடத்தை அமைத்துக் கொள்ளல்
3. அந்நியோன்னிய அன்பால் முழுமையடைதல்
4. ஒவ்வொருநாளும் ஒருவருக்காக ஒருவர் குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஒதுக்குதல்

29. ஒரு குருவானவரின் கீழ் குறிப்பிட்ட சபையின் சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றி விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவிப்போர்
1. துறவற சபைக்குருக்களாவர் 3. மறைமாவட்டக் குருக்களாவர்
2. துறவற சகோதரிகளாவர் 4. துறவற சகோதரர்களாவர்

30. பொதுத்திருமடல்களின் எழுத்தாளர்களுள் ஒருவர்
1. பவுல் 2. யூதா 3. மத்தேயு 4. மாற்கு

31. இறைவன் விண்ணகவாழ்க்கை என்னும் புதிய வானத்தையும், புதிய பூமியையும் ஆயத்தம் செய்துள்ளார். அதற்கான முன்னடையாளமாக இருப்பது
1. திருமுழுக்கு யோவானின் வருகை 3. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம்
2.திருமுழுக்கு என்னும் அருளடையாளம் 4. இயேசுவின் உயிர்ப்பாகும்

32. ‘‘உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்’’ எனக் கூறியவர்
1. புனித யாக்கோபு 2. புனித யோவான் 3. புனித பேதுரு 4. புனித பவுல்

33. இறைவன் மனிதனை விட மேன்மையும் மகத்துவமும் மிக்கவராகக் காண்பிக்கப்படுகிறார் இவ்விதம் காண்பிக்கும் மரபு
1. யாவே மரபு 2. எலோகிம் மரபு 3. இணைச்சட்டமரபு 4. குருக்கள் மரபு

34. எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினரைக் கொண்ட தொகுதி
1. நாத்தான், எலியா 2. எரேமியா, குல்தா
3. எலியா, எசாயா 4. நாத்தான், ஓசேயா

35. ‘‘ நான் உன்னோடு இருப்பேன்’’ என்னும் இறைவார்த்தை
1. இறைவன் மோசேக்கு வழங்கியது
2. இறைவன் எசாயா இறைவாக்கினருக்கு வழங்கியது
3. இறைவன் எரேமியா இறைவாக்கினருக்கு வழங்கியது
4. இறைவன் பேதுருவிற்கு வழங்கியது



kalvi.lk

36. எமது தேவைக்குரியதைக் கூடப் பகிர்ந்து கொள்ள எம்மை அழைப்பது
   1. திருமுழுக்கு யோவானின் பொதுமக்களுக்கு ஆற்றிய அறிவுரையின் படிப்பினையாகும்
   2. அவர் வரிதண்டுவோருக்கு ஆற்றிய அறிவுரையின் தொகுப்பாகும்
   3. அவர் படைவீரருக்கு ஆற்றிய அறிவுரையின் படிப்பினையாகும்
   4. திருமுழுக்கின் மூலம் எமக்குக் கிட்டும் அழைப்பாகும்

37. ‘‘இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. …. ஏனெனில் இறையாட்சி உங்கள் நடுவேயே செயற்படுகிறது’’ என்று பதிலளிப்பதற்குக் காரணமாக அமைவது
   1. இறையாட்சி தொடர்பான மறைநூல் அறிஞரின் வினாவிற்காகும்
   2. இறையாட்சி தொடர்பான சதுசேயரின் வினாவிற்காகும்
   3. இறையாட்சி தொடர்பான பரிசேயரின் வினாவிற்காகும்
   4. இறையாட்சி குறித்து மலைப்பொழிவு போதனையின் போதாகும்

38. இயேசுவைப் பின்சென்ற யோவானும் யாக்கோபுவும்
   1. செக்கரியா, எலிசபேத்தின் புதல்வர்கள்
   2. ஆமோஸ் எல்கானாவின் புதல்வர்கள்
   3. செபதேயு, சலோமையின் புதல்வர்கள்
   4. செக்கரியா, சலோமையின் புதல்வர்கள்

39. திருப்பாடல் 51: 17இல் குறிப்பிடப்படும் இறைவனுக்குகந்த காணிக்கை யாது?
   1. மாசுபடாத மிருகம் 2. தூபப்பலி
   3. முதல் அறுவடை 4. நொறுங்கிய உள்ளம்

40. கர்த்தர் கற்பித்த செபத்தை எழுதியுள்ள இரு நற்செய்தியாளர்கள்
   1. யோவானும் மத்தேயுவும் 2. மத்தேயுவும்,லூக்காவும்
   3. மாற்குவும், யோவானும் 4. மத்தேயுவும், மாற்குவும்

[40 x 1 = 40 புள்ளிகள்]

## பகுதி–II

❖ **முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1. (i) ஞானத்தின் பிரிவுகள் இரண்டினை எழுதுக.
   (ii) கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட போது வருகை தந்த மறை போதக குழுக்களுள் இரண்டைப் பெயரிடுக.
   (iii) யூதப் பாஸ்கா உணவில் இரண்டைக் குறிப்பிடுக.
   (iv) இரண்டாம் கட்டளைக்கு எதிரான செயல்களுள் இரண்டை எழுதுக.
   (v) திருப்பலிக்குத் தலைமை தாங்கும் குருவானவரின் செபங்களுள் இரண்டைக் குறிப்பிடுக.
   (vi) எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினருள் இருவரைப் பெயரிடுக.
   (vii) நோவா இறை அழைப்பைப் பெற்றுக் கொண்டதற்கான காரணங்கள் இரண்டு தருக.
   (viii) விபூதிப்புதனன்று குருவானவர் நெற்றியில் பூசும்போது கூறும் இறைவார்த்தைகள் இரண்டு தருக.
   (ix) இயேசு முகங்கொடுத்த சோதனை ஒன்றையும் அதனை வெற்றி கொண்ட முறையையும் எழுதுக.
   (x) ஆபிரகாமுடன் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையின் விடயங்கள் இரண்டு தருக.



kalvi.lk

2. (i) தொடக்ககாலத் திருச்சபையின் பண்புகள் இரண்டு தருக.
(ii) பெந்தக்கோஸ்தே தினத்தன்று பேதுரு ஆற்றிய உரையின் சாராம்சங்கள் மூன்று எழுதுக.
(iii) பேதுருவின் வாழ்க்கையிலிருந்து உமது வாழ்வுக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஐந்தினை விபரிக்குக.

3. (i) பரிசுத்த வாரத்தின் பிரதான திருவழிபாட்டு நாட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(ii) பொதுக்காலத்தில் கொண்டாடப்படும் விழாக்கள் மூன்றைக் குறிப்பிடுக.
(iii) திருப்பலியில் சிறந்த முறையில் பங்கேற்க, கிறிஸ்தவர்கள் நிறைவேற்ற வேண்டிய செயல்கள் ஐந்தினை விபரிக்குக.

4. (i) இறையன்பிற்கு எதிரான பாவங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
(ii) திருப்பலி ஒப்புக் கொடுப்பதன் பிரதான நோக்கங்கள் மூன்று தருக.
(iii) திருவழிபாட்டைச் சிறந்த முறையில் நிர்வகிக்க திருத்தொண்டர்களால் ஆற்றப்படும் பணிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

5. (i) ஐந்நூலில் செல்வாக்குச் செலுத்தும் பாரம்பரியங்கள் இரண்டைப் பெயரிடுக.
(ii) ஐந்நூலின் முக்கியத்துவம் பற்றி மூன்று வசனங்கள் குறிப்பிடுக.
(iii) ஐந்நூலைப் படிப்பதனால் உமது வாழ்க்கைக்குக் கிடைக்கும் பயன்கள் ஐந்து எழுதுக.

6. (i) திருவிவிலியத்தில் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் இரண்டு தருக.
(ii) சமுதாயத்தில் காணப்படும் உடன்படிக்கைகளை விட திருவிவிலிய உடன்படிக்கைகளில் காணப்படும் வேறுபாடுகள் மூன்று தருக.
(iii) சீனாய் உடன்படிக்கையின் முக்கியத்துவம் பற்றி ஐந்து வசனங்கள் தருக.

7. பின்வருவனற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
(i) ஜோசவ்வாஸ் அடிகளாரின் பணிகள்
(ii) அன்னை திரேசாவின் இரக்கப்பணிகள்
(iii) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page